சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.02.06.2026.
OS.No.624/2018
PW 1 : தியாகராஜன் (வயது 70 ) த/பெ. நாகமுத்து
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**<u>1,5 மற்றும் 7 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பு கு.வி</u>**

எனது அப்பா நாகமுத்துவின் முதல் மனைவி பெயர் காமாட்சி. எனது பிராது மற்றும் முதல் விசாரணையில் எனது தாயார் பெயர் மீனாட்சி என்று தவறுதலாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது தாயார் இறந்த பிறகு எனது தகப்பனார் எனது தாயாருடன் உடன் பிறந்த சகோதரி கங்கையம்மாளை இரண்டாம் திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான்.

எனது தாயாருக்கு நானும் பழனி என்பவர் மட்டுமே வாரிசுகள். எனது உடன் பிறந்த சகோதரர் பழனிக்கு திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார். எனது தகப்பனாரின் 2 ஆம் மனைவியின் வாரிசுகள் தான் வழக்கின் 1 முதல் 5 பிரதிவாதிகள் என்றால் சரிதான்.

தாவா முதல் அயிட்ட சொத்து நத்தம் சர்வே எண். 41/10 என்பது எனது அப்பாவின் பூர்வீக சொத்தா என்றால் ஆமாம். எனது அப்பா எந்த வருடம் இறந்தார் என்று எனக்கு தெரியாது. தாவா 2 ஆம் அயிட்ட சொத்தான சர்வே எண். 5/7 சி -ஐ யாருக்கு விற்பனை செய்தேன் என்றால் யாருக்கும் கிரயம் செய்து கொடுக்கவில்லை.

தாவா 2 ஆம் அயிட்ட சொத்தான சர்வே எண்.5/7 சி -க்கு தற்போது பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் சக்திவேல் பெயரில் உள்ளது. தாவா பி அட்டவணை முதல் அயிட்ட சொத்து சர்வே எண்.65/4 யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் தெரியாது. 24.08.1994 ல் இந்த வழக்கின் 1,3 பிரதிவாதிகளான சக்திவேல், அங்கமுத்து ஆகியோர்களுக்கு பாக பாத்திய விடுதலை ஆவணம் எழுதி கொடுத்தேனா என்றால் ஞாபகம் இல்லை. நான் 7 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன்.

நான் பொதுவாக ஆவணங்களில் கையொப்பமிடும்போது, தமிழில் கையொப்பம் இடுவேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 24.08.1994 ஆம் தேதியிட்ட பாக பாத்திய விடுதலை ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் என்னுடையது மாதிரி தெரிகிறது, ஆனால் திருத்தமாக உள்ளது.

இலால்குடி , சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்சொன்ன 24.08.1994 ஆம் தேதியிட்ட ஆவணத்தின்பேரில் 1,4 பிரதிவாதிகளிடமிருந்து எனது பாக தொகையாக ரூ.5,000/- பெற்றுக்கொண்டு பாக பாத்திய விடுதலை ஆவணத்தை எழுதி கொடுத்துள்ளேன் என்றால் எந்த தொகையும் வாங்கவில்லை.

குடும்ப சொத்துக்களை பொறுத்து, மேற்சொன்ன பாக பாத்திய விடுதலை ஆவணத்தை எழுதி கொடுத்துவிட்டு அதற்கு விரோதமாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1, 4 ஆம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் வழக்குரையை நான் படித்து பார்த்தேனா என்றால்  இல்லை. அதனால் மேற்படி 1,4 பிரதிவாதிகளின் சங்கதிகள் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

1,4  பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளது படி பாக பாத்திய விடுதலை ஆவணம் எழுதி கொடுத்துள்ளேன் என்றும் அது பற்றி தெரிந்தே வழக்கிற்காக மறுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா பி அட்டவணை சொத்தில் முதல் அயிட்ட சொத்து சர்வே எண். 65/4 ல் 1 ஆம் பிரதிவாதி மனைவி ராஜாத்திக்கு குத்தகை மாற்று ஆவணமாக எழுதி கொடுத்தேனா என்றால் இல்லை.

மேற்சொன்ன குத்தகை மாற்று ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், அதனை பற்றி தெரிந்தும் வழக்கிற்காக மறுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா பி அட்டவணை 2 ஆம் அயிட்ட சொத்தான சர்வே எண். 13/3 ஏ சொத்து சுந்தர்ராஜ் அய்யருக்கு பாத்தியமானது என்றால் சரிதான். சர்வே எண்.15/1 ஏ சொத்தும் சுந்தர்ராஜ் அய்யருக்கு பாத்தியமானது என்றால் சரிதான்.

தாவா பி அட்டவணை 2 ஆம் அயிட்ட சொத்தினையும், மேற்சொன்ன சர்வே எண். 15/1 ஏ சொத்தினையும் எனது தகப்பனார் குத்தகை சாகுபடி செய்து வந்தார். அதற்கான ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. எனது அப்பா குத்தகை சாகுபடி செய்யவில்லை என்றும் அதனால் தான் அதற்கான ஆவணம் எதுவும் எனது தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

தாவா பி அட்டவணை 3 ஆம் அயிட்ட சொத்து விஸ்தீரணம் 3 ஏர்ஸ் இடமானது நாராயண சாமி அய்யருக்கு பாத்தியமானது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 ஆவணம் நாராயணசாமி பெயரில் உள்ள பட்டா என்றால் சரிதான். மேற்சொன்ன சொத்து சர்வே எண்.57/3 ஐ எனது தகப்பனார் குத்தகை சாகுபடி செய்து வந்தார் என்று காட்டுவதற்கு என்னிடம் எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான்.

எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து அவரது காலத்திற்கு பிறகு எனக்கு கிடைத்த பாக சொத்தினை நான் 24.08.1994 ஆம் தேதியிட்ட பாக பாத்திய விடுதலை ஆவணம் மூலம் 1,4 பிரதிவாதிகளுக்கு பதிவு ஆவணம் மூலம் எழுதி கொடுத்துவிட்டதால் தாவா சொத்துக்களில் எந்தவிதமான பாக உரிமையும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

24.08.1994 ஆம் தேதியிட்ட பதிவு பாக பாத்திய விடுதலை ஆவணத்தையும் 1 ஆம் பிரதிவாதியின் மனைவிக்கு எழுதி கொடுத்த பதிவு குத்தகை சாகுபடி மாற்று ஆவணத்தையும் மறைத்து இந்த வழக்கினை நான் தாக்கல் செய்துள்ளதால் வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

/ signed/
தியாகராஜன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

sd/-Tmt.R.Mohana.,B.L.,
சார்பு நீதிபதி
இலால்குடி